29—10—61 வார வெளியீடு விலை 16

விடுதலைக் காவியம் பாடி!

—[ந. அலி பி. ஏ.]—

விடுதலைக் காவியம் பாடிட எழுவாய்
வீணரின் கொட்டம் அடக்கிடத் துணிவாய்
விடுபகை என்றே புறப்படு தோழா
வெற்றியுன் பக்கம் நிலைத்திடும் உண்மை
அடுகளம் கண்டு பயப்பட வேண்டாம்
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
மடுவினில் இறங்கும் புனலெனப் பாய்ந்து
மன்னிய தமிழ்ப் புகழ் காத்திட விரைவாய்!

எத்தனை காலம் பிறர்க்கடி பணிவாய்
எத்தனை காலம் கண்ணீர் வடிப்பாய்
இத்தனை காலத் துன்பத்திற்கோர்
இறுதி காண புயலெனக் கிளம்பு
தத்துவம் பேசி ஏசிடு வோர்முன்
சாய்ந்திட வேண்டாம்; மாய்ந்திடும் உன்சீர்!
சித்திரச் சோலை திராவிட நாட்டைச்
சிதைத்திடு வோரை வதைத்திட எழுவாய்!

மானங் காத்திட வாளெடுத் தார்எம்
மக்களெனத் திராவிடத் தார்உனைப் புகழ்வார்
ஏனோ தயக்கம் புலிநிகர்த் தோழா!
எடுவாள் தொடுபோர் பகையென்ன மலையோ!
மானம் இழந்த உயிர்ப்பிண மாக
வாழ்வதைக் காட்டிலும் மடிவது நன்றே!
மீனக் கொடியோன் வழிவழி வந்த
வேற்படை வீரா! வீழ்த்திடு பகையை!



ஏளனம்!

அழுக்கேறிப்போன உடை. பஞ்சடைந்த கண்கள், கலைந்து, குலைந்து, எண்ணெய் இழந்து காற்றில் அலைந்துகொண்டிருக்கும் பரட்டை முடி. கையிலே சிறியதொரு பை. இந்தக் கோலத்துடன் மரத்தடியில் வந்து அமர்ந்தார் அவர். மரத்தெதிரில் சிறிய மண்டபம் ஒன்று. அந்த மண்டபத்தில் நாலைந்துபேர் அமர்ந்திருந்தார்கள். அவர்களில் ஒருவன், கையில் விரித்துப் பிடித்திருந்த புத்தகத்திலிருந்து கதை யொன்று படித்துக்காட்டிக் கொண்டிருந்தான். மற்றவர்கள் கதையைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். படித்துக்கொண்டிருந்தவன் வாயிலிருந்து கிளம்பிய ஒவ்வொரு சொல்லும் அழுத்தமாகத்—திருத்தமாக அங்கே அருகிலிருந்தவர்களின் காதுகளில் எவ்வாறு விழுந்ததோ, அவ்வாறே மரத்தடியில் அமர்ந்திருந்தவர் செவியிலும் வந்து விழுந்தது.

மரத்தடியில் அமர்ந்திருந்தவர் நிமிர்ந்து உட்கார்ந்தார். அவர் தம் அலுப்பையும், களைப்பையும் மறந்து போனார். பசியும், தாகமும் பறந்தோடிப் போய்விட்டன. அவரை அறியாமல் அவர்உள்ளம் உவகைக் கூத்தாடியது.

படித்துக்கொண்டிருந்தவன் நிறுத்தினான்.

“கதையென்றால் இதல்லவா கதை! கதையென்றால் இப்படி யல்லவா இருக்கவேண்டும்! எவ்வளவு அருமையாக இந்தக் கதையை அமைத்திருக்கிறார் இதன் ஆசிரியர்!” என்று ஒருவன் தன் பாராட்டுதலைத் தெரிவித்தான்.

“இந்தக் கதையின் ஆசிரியர் முடிநாகன் எத்துணை பெரிய உண்மையை எவ்வளவு எளிமையாக, எவ்வளவு இனிமையாக, எவ்வளவு இலாவகமாக எடுத்துக் கூறுகிறார்! அப்பப்ப, அவர் கதைசொல்லும் தன்மையிலே அமைந்துள்ள தனித் திறமையை என்னென்று சொல்வது!” என்றான் மற்றொருவன்.

கடைசியாக ஒருவன் சொன்னான்:

“இந்த ஒரே ஒரு கதைக்காக இதை எழுதிய ஆசிரியர் முடிநாகனுக்குப் பொற்கோயில் ஒன்றுகட்டி வழிபட்டாலும் போதாது”

அந்த உரையாடலைக் கேட்டபோது மரத்தடியிலிருந்தவர் உவகைப்பெருக்கால் மயங்கியே வீழ்ந்து விடுவார்போலானார்.

சிறிது நேரம் ஆயிற்று. மரத்தடியிலிருந்தவர் எழுந்தார். எதிரே மண்டபத்தை நோக்கி நடந்தார். கால்கள் பின்னின. அவரே உணர்ந்து கொள்ள முடியாததொரு தயக்கம்.

★ கனகு ★

சற்று நின்றார். பின்னும் இரண்டடி எடுத்துவைத்தார். நின்றார். நடந்தார். மண்டபத்துக்குள் நுழைந்து விட்டார்.

“வணக்கம்!”

உள்ளேயிருந்தவர்கள் ஏதோ அதிசயப் பொருளைப் பார்ப்பவர்கள் போல் வந்தவரை நோக்கினார்கள். ஏனோ அவர்கள் முகத்தைச் சுளித்துக்கொண்டார்கள்.

“நீ யார்?”—ஒருவன் கேட்டான்.

“யாரைப்பார்க்கிறாய்?”–மற்றொருவன் வினவினான்.

வந்தவர் திகைத்தார். உள்ளேயிருந்தவர்கள் ஒருமை உரையில் அசட்டையாகக் கேட்டகேள்விகள் அவரைக் குழப்பிவிட்டன. ஒருமுறை அவர் தம்மைத்தாமே பார்த்துக் கொண்டார். ‘ஆமாம், என்னுடைய கோலம் மிகமிக வறியகோலம். இந்தக் கோலத்தில் உள்ள என்னை அவர்கள் மரியாதை மொழியில் வரவேற்பார்கள் என்று எப்படி நான் எதிர்பார்க்கமுடியும்? இயல்பு தானே அவர்கள் அப்படிப்பேசுவது. நான் யார் என்று தெரிந்தால் இப்படி அவர்கள் ஒருமைப் பதத்திலா என்னிடம் கேள்விகேட்பார்கள்? இதோ பார் அவர்களைத் திணற அடிக்கிறேன்!’

“நான் யாரென்று தெரிந்தால் நீங்கள் வியப்படைந்து போவீர்கள்!”

“என்னய்யா அது? அவ்வளவு சிறப்புவாய்ந்த பெரிய மனிதனா நீ?—அதைத்தான் சொல்லித் தொலையேன்!” ஒருவன் சட்டென்று சொன்னான் அப்படி.

“இதோ பார், நீயாராகவோ இருந்துவிட்டுப்போ! அதைப்பற்றி எங்களுக்கு அக்கறை கிடையாது. முதலில், நீ என்னவேலையாகவந்தே! அதைச்சொல் — யாசகம் கேட்கத் தானே வந்தே?”

‘யாசகம்’ — அந்தச்சொல் வந்தவர் நெஞ்சில் வெடிகுண்டாகப் பாய்ந்தது. என்றாலும், உள்ளதைத் தானே அவர்கள் சொல்கிறார்கள். ஒருவகையில் இல்லாவிட்டால், பிறிதொரு வகையில் அவருடைய நோக்கம் யாசகம் பெறுவதுபோன்றதொரு நோக்கந்தானே! தடுமாறிய நிலையில் என்ன பேசுவதென்று தோன்றாமல் சற்று நேரம் அப்படியே நின்றார் அவர்.

(16-ம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

29—10—'61.

தம்பி!

சொல்லும்போதே சுவைதரும், 'தம்பி' என்ற இந்தச் சொல்லை ஒரு திங்களாகச் சொல்ல இயலாமற் போய்விட்டதை எண்ணி எண்ணி, இனிப்பூட்டும் அந்தச் சொல்லை, மீண்டும் மீண்டும் சொல்லிச் சொல்லிச் சுவை பெறலாமா என்று தோன்றுகிறது. ஆனால், தம்பி! தவறு என்னுடையது அல்ல. துரைத்தனத்தின் போக்கு, நம்மை ஒரு திங்கள் பிரித்துவைத்தது. ஆண்டுக்கணக்கிலே பிரித்துவைக்கத்தக்க போக்கினைத் துரைத்தனம் மேற்கொண்டிடத் திட்டமிட்டும் இருக்கிறது; அறிவாய். இந்தப் பிரிவு, கடுமையான சட்டம் காரணமாக ஏற்பட்டதல்ல; பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாட்டு விதிமுறைகள் காரணமாக ஏற்பட்டுவிட்டது; இதழுக்கான தாள் கிடைக்கவில்லை, உரிய நேரத்தில்; பலமுறை வேண்டுகோள் விடுத்தும்! பிறகு, நமது நண்பர் தருமலிங்கம், எம்.பி. அவர்கள் இதற்கென்றே, டில்லிப்பட்டணம் பறந்து சென்று முறையிட்டு, நெருக்கடி நிலைமையை விளக்கிக்கூறித் தாள் கிடைத்திடச் செய்தார்; இதோ, உன்னிடம் பேசிட முடிகிறது, தம்பி!

ஆனால், மடல் தீட்டி மகிழும் வாய்ப்பினைத்தான், நான் ஒரு திங்கள் இழந்து தவித்தேனேயன்றித் தம்பிகளை நித்தநித்தம் காணத் தவறினேனில்லை; தித்திப்பளிக்கும் உரையாடி மகிழ்ச்சி பெறுமற் போகவில்லை; காலை மாலை நடுப்பகல் நள்ளிரவு எனும் கால அளவும் தன்மையும் குறுக்கிடவில்லை, தம்பிகளைக் கண்டு மகிழும் திட்டத்தில். எங்கும் எழில் நிறை முகங்கள்! அன்பொழுகும் பார்வை! புன்னகை! உறுதி! இலட்சியப் பற்று! கொள்கை முழக்கம்! சீரிய பணி!

தம்பி! எங்கு சென்றாலும் ஓர் புதிய துடிதுடிப்புத் தென்படுகிறது; புத்தம் புதியதோர் ஆர்வம்! ஒவ்வொருவரும் தத்தமது ஆற்றலைப் பெரும் அளவுமட்டுமல்ல, முழு அளவு காட்டியாகவேண்டும் என்ற நிலையிலே, சுறுசுறுப்புடன் பணியாற்றுகின்றனர். தொட்டுப்பார்ப்பதிலும், கைதட்டி வரவேற்பதிலும், கட்டிப்பிடித்துக்கொள்வதிலும், மாலையிட்டுக் காண்பதிலும், தழதழத்த குரலொலி எழுப்புவதிலும், தங்கநிறக் குழவிகளை என்னிடம் கொண்டுவந்து கொடுத்து இருக்கச் செய்வதிலும், தேர்தல் நிதி அளிப்பதிலும், சேதிகளைத் திரட்டித் தருவதிலும், எத்துணை ஆர்வம் மகிழ்ச்சி, பெருமை கொள்கின்றனர், உடன் பிறந்தார்! இதைக் காணக்காண, மாற்றார் கொள்ளும் மருட்சியும், வேற்றூர் காட்டிடும் வியப்புணர்ச்சியும், வளருகிறது, வேக வேகமாக. தாயகத்தின் தன்மானம் காத்திட, மாற்றாரின் முயற்சிகளை முறியடித்திட, களம்புகக் கிளம்பிடும் படையொன்று, வீரநடை போட்டுச் செல்லுங்காலை, வீதிகளின் இருமருங்கிலும்,

குன்றம் பல சென்றிருந்தேன்

பெண்டிரும் முதியவரும் சிறுமியரும் சிருரும் கூடி நின்று, கையொலி கிளப்பியும் வாழ்த்தொலி முழங்கி யும், பூச்சொரிந்தும், புன்னகை சொரிந்தும், படையின ருக்கு வழி அனுப்பு நடத்துவது, கண்டிருக்கிறேன், கண்டிருப்பாய், காட்சிகளாக. பூச்சொரியும்போதே, கண்ணீர் கசியும்! கண்ணீரை விரட்டியபடி களிப்பொளி தோன்றும்! வாழ்த்தொலி எழுப்பும்போதே, வந்திடக் கூடுமே பேராபத்து களத்தில், என்று எண்ணம் எழும், அச்சம் குடையும்; மறுகணமோ, நாடு வாழ்ந்திடும் என்ற உறுதி அச்சந்தனை விரட்டி அடிக்கும். மணமாகித் திங்கள் சிலவே ஆகின்றன! மலர்ச்சோலை உலாவிடவும், மயிலே என்று அவன் அழைக்கக்கேட்டு மகிழ்ந்திடவும், மடியா மலரணையா? விழியா சுடர் ஒளியா? இதழா கனிச்சுளையா? இடையா படர் கொடியா? உடலா பொன் உருவா? என்றெல்லாம் அவன் பேச, விழியால் பதிலளித்து மகிழலாம் என்ற எண்ணம் கொண்ட எழிலரசி, மன்னன் களம் நோக்கிச் செல்லும் காட்சி கண்டு, கையொலியும் எழுப்புகிருள், கண்ணெளியும் பொழிகிருள், காதலின்பம் இழக்கிரேம் என்பதையும் உணருகிருள், பெற்ற இன்பத்தை எண்ணுகிருள், வெட்கி முகம் சிவக்கிருள், களத்திலே 'அவருக்கு' ஏதேனும் ஏற்பட்டுவிட்டால்? என்று எண்ணுகிருள், அச்சத்தால் முகம் வெளுக்கிறது, மறு கணமோ, நாடு வாழ்ந்திடக் கூடி நடந்திடும் தானையினர் எழுப்பிடும் வீரமுழக்கம் கேட்கிருள், எழுச்சி கொள் கிருள், நாடு மீட்டிடச் செல்கிருன் என் மணவாளன்! என்று பெருமை கொள்கிருள்.

தம்பி! எனக்கென்னவோ இப்போதெல்லாம், நமது கூட்டங்களில், ஊர்வலங்களில், காணப்படும் எழுச்சி யும் மகிழ்ச்சியும், உணர்ச்சியும், எழுப்பப்படும் முழக்க மும், களம்நோக்கிச் செல்லும் படையினை வாழ்த்தி வழியனுப்பிவைக்கும் காட்சியைத்தான் நினைவிற்குக் கொண்டுவருகிறது! நமது 'உடன்பிறந்தார்' என்பத ஞல் மட்டும் ஏற்படும் மகிழ்ச்சி அல்ல! நமது 'உடன் பிறந்தார்' உயிரைத் துரும்பென மதித்து, எதையும் இழக்கத்துணிந்து, இழக்கொணுத உரிமை காத்திடச் செல்கிருர் களம் நோக்கி; கரமோ காலோ, உடலிற் சில பாகமோ வெட்டுண்டுபோகலாம்! உயிரே பட்டுப் போகலாம்! செல்கிருர் செருமுனை நோக்கி! திரும்புங் காலை வெற்றிக்கொடிபறக்கும்! ஆயின், வீரர்பலர் உயி ரிழந்திடுவர்—என்றெலாம் எண்ணங்கள் பலப்பல எழும் பித்தான், இந்த உணர்ச்சியைக் கிளப்பிவிட்டுவிட்டிருக் கிறது. ஒளிப்பானேன், மறைப்பானேன், தம்பி! எனக்கே அப்படிப்பட்ட உணர்ச்சிதான் முழுக்க முழுக்க. ஒவ் வொரு நாள் காணும்போதும், ஆசைதீரப் பார்த்திடு வோம், நாளையதினம் துரைத்தனத்தார், பார்க்கவிடு கிருர்களோ இல்லையோ!—என்ற எண்ணம், ஒவ்வொரு முறை பேசும்போதும், சொல்லவேண்டியதனைத்தையும் சொல்லிவிடவேண்டும், ஏனெனில், மீண்டும் பேசிடும் வாய்ப்பு எந்த விநாடியும் பறிக்கப்பட்டுவிடலாம்—என்ற எண்ணம். தம்பி! நம்மில் அனைவருமே இந்த நிலையை மிக நன்ருக உணர்ந்துவிட்டிருப்பதனுல்தான், கரை புரண்டோடும் எழுச்சிமட்டுமல்ல, இதுவரை காணுத புத்துணர்ச்சி, மன நெகிழ்ச்சி காணுகிரேம். களம் நோக்கி நடக்கிரேம், தம்பி! வாழ்த்தி வழியனுப்புகிறது நாடு! கண்துடைத்துக், கட்டிப்பிடித்து, கன்னம் தொட்டு, சென்றுவா, மகனே! வென்று வா! என்று வீடும் வாழ்த்தி அனுப்புகிறது.

நம்மிலே சிலர் பிரிந்ததனுல் நாட்டுநிலை அறியா தார் சிலர், நமது முயற்சி முறிந்துவிட்டது, இயக்கம் உடைந்துவிட்டது, உருக்குலைந்த நிலையில் இந்த விடு தலை இயக்கம் ஏதும் செய்ய இயலாததாகி, எடுப்பார் கைப்பிள்ளையாகிவிடும், அல்லது மாற்ருர்முன் மண்டி யிடும் என்றெல்லாம் எண்ணி மனப்பால் குடித்தனர். நிலைமையோ அஃதன்று. 'களைபோயிற்று, பயிர் தழைத் தது!' என்று கூறிடுவார் உளர்; அவர்களைக் கடுமை யாகக் கண்டித்துத்தான் அடக்கிவருகிறேன்—சொல் வதைத்தான் நான் தடுத்திட முடிகிறதேயன்றி, எண் ணத்தை எங்ஙனம் இல்லாது போக்கிட இயலும். உள்ள படி அவ்விதம் எண்ணுவோர் பலர் உளர். ஆனுல் மிகப் பலரோ, சிலர் நம்மை விட்டுப் பிரிந்தனர், எனவே அவர்கள் செய்துவந்த பணிகளுக்கு ஈடுசெய் திடும்வண்ணம் நாம் மிகுதியாகப் பணியாற்றிட வேண் டும்; அதுமட்டுமல்ல, அவர்களின் இன்றையப் போக் கினுல் ஏற்படும் இழப்புகளையும் ஈடுகட்டியாகவேண்டும் என்ற எண்ணத்துடன் மிகத் திறம்படப் பணியாற்று கிருர்கள்.

மாற்றுக் கட்சியினர் இதை உணருகிருர்களோ இல்லையோ; எல்லாக் கட்சிகளுமே தேர்தல் நோக் குடன் சுறுசுறுப்பாகத்தான் பணியாற்றி வருகின்றன; நம்மைப் போலவே! ஆனுல், மற்ற எவர் நடத்தும் இயக் கத்திலும், நமது இயக்க நிகழ்ச்சிகளில் காணப்படும் இந்தப் 'பாச உணர்ச்சி' இருப்பதாகத் தெரிவதில்லை— தெரியக்காணுேம்—இருப்பதற்கான அறிகுறியும் இல்லை.

எடை போடுவது—எவரெவரிடம் என்னென்ன முறையில் பேசுவது—என்னென்ன வாக்களிப்பது— எவரைச் சிக்க வைக்க என்ன வலை, எவருக்கு என்ன விலை—என்ற இவைபற்றிய எண்ணம்தான் அங்கெல் லாம். கண்டதும் ஓர் முகமலர்ச்சி! பேச்சிலே ஓர் கனிவு! பார்வையிலேயே ஓர் பாசம்!—இவை இங்கன்றி வேருேர் இடத்தில் இல்லை.

தம்பி! உணவு விடுதியிலும் சாப்பிடுகிருர்கள்; வீட்டிலேயும் சாப்பிடுகிரேம். வீட்டில் செய்யும் கறி

வகைகளைக் காட்டிலும், அதிகமாகவே உணவு விடுதியில் செய்கிருர்கள். வீட்டிலே, இலை போடுவார்கள்—மறதியால், பொத்தல் உள்ளதாகக்கூடப் போட்டுவிடுவார்கள். தெளித்துச் சுத்தம் செய்யத் தண்ணீர் வைக்க மறந்துவிடுவார்கள். செய்த கறி வகையிலே ஒன்றை இலையிட மறந்து போவதுமுண்டு. இவை யாவும் வீட்டில். உணவு விடுதியில் ஒழுங்காக, வைக்க வேண்டியதை வைத்திட வேண்டிய முறைப்படி வைக்கிருர்கள். கறிவகை பலப்பல! எனினும், தம்பி! நீ, கவனித்ததுண்டோ இல்லையோ—விடுதியிலே, கறியும் சோறும் படைத்திடும்போதும், கலந்து நாமதனை உண்டிடும்போதும், உணவு விடுதிக்காரர் காண்பார், கனிவு இருக்காது; கேட்பார் இன்னும் வேண்டுமா என்று; ஆனல் பேச்சில், எழுத்து மிகுதியாக இருக்கும், எண்ணம் இருக்காது; விழி திறந்திருக்கும் வெறிச்சிட்ட பார்வை இருக்கும்; இது முதல்தரமான உணவு விடுதியில். மட்டமான விடுதி எனில், தம்பி! நாம் சாப்பிடச் சாப்பிட, அவன் முகம் கருத்திடும், நாம் கேட்போம், அவன் படைக்குமுன் நம்மை உற்றுப் பார்ப்பான்; அந்தப் பார்வையிலே பகை இருக்கும், கேள்வியும் இருக்கும்; நாம் உண்டிடுவோம், அவன் தூரநின்று கவளம் அதிகமாக உள்ளே செல்லச் செல்ல, ஐயோ! நமக்குக் கிடைக்கக்கூடிய இலாபம், குறைந்துகொண்டே வருகிறதே என்று எண்ணி ஏக்கம் கொள்வான். உணவு படைத்திடும் பணியாளன் ஒருமுறைக்கு இருமுறை, நமது இலை நோக்கி வந்து நின்று, என்ன தேவை என்று கேட்டிடக் கண்டால், விடுதிக்கு உரிமையாளன், சதி ஏதோ நடக்கிறது! பயல் நம்மைப் பாழாக்குகிருன்! என்றெண்ணி, அந்தப் பணியாளனை முறைத்துப் பார்ப்பான்; கடுமொழியும் புகல்வான்.

தம்பி! விடுதியில் உணவளிப்பது இலாப நோக்குடன்; நம்மிடம் கொண்ட அக்கரையாலா!!

விடுதியில் உண்பவர், அளவு குறைத்துச் சாப்பிடச் சாப்பிட விடுதிக்காரருக்கு மகிழ்ச்சி. அளவும் வகையும் அதிகம் கேட்போரைக் கண்டால் வெறுப்பு.

எவரிடமும் கனிவு இருக்கக் காரணமில்லை; ஏனெனில், உண்டுவிட்டுப் போகும் ஓராயிரவரில் இவர் ஒருவர்; ஊர்பேர் தெரிவானேன்; உபசாரங்கள் செய்வானேன்; உள்ளம் மகிழ வைப்பானேன்!

இதற்கு முற்றிலும் வேறு அல்லவா, இல்லத்துச் சோறிடும் முறை.

நான் கூறியதுபோலத் தம்பி! சோறிடும் முறையிலே குறைபாடுகளும் இருக்கும். சோறுக்கேற்ற அளவு சாறு ஊற்றியிருக்கமாட்டார்கள்; கலந்து பார்த்ததில் மேலும் கொஞ்சம் சாறு வேண்டும் என்று நமக்குத் தோன்றும்; அதை அறியாது அணங்கு நம் எதிர் நின்று, வளையைச் சரிப்படுத்திக்கொண்டிருக்கக் கூடும், அல்லது வந்து நிற்கும் பிள்ளைக்கு ஊட்டி மகிழ்ந்தபடி மெய்மறந்து இருக்கக்கூடும்; துவக்கத்திலே தம்பி! கோபம்கூட நமக்கு எழக்கூடும் — துளியும் முறை வகை அறியாத மதியிலியாக உள்ளாளே என்று எண்ணத் தோன்றும்; முறைத்துப் பார்ப்போம்; அவள் சிரித்தபடி நிற்பாள்; மக்வு சிந்தியதனை வழித்தெடுத்து, சுவைமிகு பண்டம் என்று இலையில் இடவும் வருவாள்; தான் சோறிட்ட முறையில் குறை வந்துளது என்பதை அறியாமலேயே. ஆத்திரமா பீறிட்டுக் கிளம்புகிறது? அவள் வீசும் பார்வை, சாறு போதுமானதாக இல்லை என்ற எண்ணத்தையே மாற்றிவிடுமே!! உணவு விடுதியிலென்ருல் நிலைமை இதுவா?

"நாலு நாழியாகக் காவு காவு என்று, சாம்பார்! சாம்பார் என்று கத்துகிறேன்; மரமாக நிற்கிருயே"

"மரம், மாடு என்று மரியாதை இல்லாமல் பேசாதே ஐயா! உமக்குச் சேறுபோலச் சாம்பார் வேண்டும் என்று நான் கண்டேனு? சாதத்துக்குச் சாம்பார், என்று நான் எண்ணிக்கொண்டேன்; உனக்கு சாம்பாருக்குச் சாதம் என்று முறை இருப்பது எனக்குத் தெரியுமா?"

"உளருதே, தெரியுமா?"

"பெரிய சூரப்புலி! சும்மா இரய்யா, நான் ஒன்றும் நீ வைத்த வேலையாள் அல்ல."

இந்த அளவோடு, நான் நிறுத்திக்கொள்கிறேன்—நிலைமை பொதுவாக இந்த அளவோடு நிற்பதில்லை.

தம்பி! நாம் சுவைத்துச் சாப்பிடச் சாப்பிட, வீட்டிலே மகிழ்ச்சியுடன், கனிவுடன், பெருமையுடன், காண்பர்! விடுதியில்? மருட்சி! அருவருப்பு! வெறுப்பு!! ஏன்? வீட்டில் உள்ளவர்கள், நம்மிடம் பாசம்கொண்டவர்கள்; விடுதிக்காரர் நம்மிடம் இலாபம் பெறுபவர். இல்லம் அன்பின் இருப்பிடம்; விடுதி? இலாபம்பெறும் இடம்! வீட்டிலே கனிவும், விடுதியிலே கணக்கும் இருப்பதுதானே, எதிர்பார்க்கவேண்டிய முறை.

தம்பி! மற்ற மற்றக்கட்சி நிகழ்ச்சிகளுக்கும் நமது கழக நிகழ்ச்சிக்கும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது எனக்கு, வீட்டுச் சாப்பாட்டுக்கும் உணவு விடுதிச் சாப்பாட்டுக்கும் இருக்கிற மாறுபாடுதான் நினைவிற்கு வருகிறது.

அமைச்சர்களைக் காண வருகிருர்கள்—ஊளரும் யார்? இவர்களெல்லாம் அமைச்சர்களாகிவிட்டார்களே! இப்படியும் காலம் கெட்டுவிட்டதே!!—என்று எண்ணி உள்ளூரக் குமுறிக்கிடக்கும் கனதனவான்! அருவருப்பை அடக்கிக்கொண்டு அதிர்ஷ்டவசத்தால் அமைச்சராளுர், அவரைப்பிடித்து மருமகனுக்கு ஒரு பெரிய வேலையைத் தேடிக்கொண்டால்போதும் என்ற நினைப்பினர்!! ஏழை எளியவரும் வருகிருர்கள், தவறு தம்பி! தவறு! அழைத்துவரப்படுகிருர்கள்; அமைச்சர் வருவதற்கு ஐந்தாறு மணிக்கு முன்பே அந்த இடத்திலே, அதிகாரிகள் நடத்திடும் அமுலையும், சீமான்கள் மோடாரில் வந்திறங்கி இடம் பிடிப்பதையும், பார்த்தபடி நிற்கிருர்கள். அமைச்சர்கள் பலப்பலர் வந்தார்கள், அவரவர், தெரிந்ததைச் சொன்னுர்கள், ஒருவரும் நம் குறை போக்கவில்லை, ஓட்டாண்டியாகிறோம் நாளுக்கு நாள், என்று நினைத்தபடி. அமைச்சர் வந்துகொண்டே இருக்கிருர் என்பது அறிவிக்கப்படுகிறது, முன்னோடியாக வரும் அதிகாரியால். மோடார் மன்னர்கள், உடையைச் சரிப்படுத்திக்கொள்கிருர்கள், அணிபணியை

ஒழுங்குபடுத்திக்கொள்கிறார்கள், அதிகாரியை நோக்கிப் பல்லிளிக்கிறார்கள், அதன் பொருள் அவர் அறிவார்; யாதெனின், அமைச்சர் அருகே அழைத்துச் செல்வீர், ஐநூறு ரூபாய் தந்தவன் நான், என்பதாகும்; அதிகாரியோ, வரிசையாக நிற்கும் கனதனவான்களைப் பார்க்கிறார், பெருமூச்செறிகிறார், ஏனோவெனில், அவர் அறிவார், எவரெவர் எந்தெந்தவிதமான கேடுகள், குற்றங்கள் செய்த பின்னர், சீமான்கள் ஆகினர் எனும் மர்மம்; எனினும் சட்டம் அவர்களைச் சாடவிடாமல் சாமர்த்தியமாகத் தப்பினவர் என்பது புரிந்து அதிகாரி, என்செய்வது என்றெண்ணி ஏங்குகிறார். அவரும் சிரிக்கிறார், இவர்களும் அப்படியே— எவர் சிரிப்புக்கும் காரணம் மகிழ்ச்சி அல்ல; எல்லாம் இடத்துக்கு ஏற்றமுறை. ஏழைக்கு இதுவொன்றும் விளங்கவில்லை. உதடு அசைகிறது யாவருக்கும்; ஒருவருக்கும் உள்ளம் அசைவதாகத் தெரியவில்லை.

அமைச்சர் வருகிறார், கும்பிடுகிறார்; குறிப்பாக யாரையும் பார்த்தல்ல; மொத்தமாக; மெத்த அலட்சியத்துடன்.

அனைவரும் வாயடைத்து நிற்கின்றனர்; அதிகாரிகள் பரபரப்புக் காட்டுகின்றனர்.

உம்! உம்!—என்று கூறுகிறார் அதிகாரி!

மனுக்களைத் தருகின்றனர் ஏழை மக்கள். வாங்குகிறார் அமைச்சர்! அதை வாங்கிக்கொள்கிறார் மற்றோர் அதிகாரி!

கோயிலிலே பூவால் அர்ச்சனை செய்ததும், அந்த மலர்கள் தேவருலகு சென்று தேவ தேவன்மீது வீழ்வதாக அல்லவா எண்ணிக் கொள்கிறார்கள்; அது பக்தியினால். இங்கு பாடுபடுவோர், 'மனு'வை மந்திரி தொட்ட உடன், குறைகள் தீர்ந்துவிட்டது என்று எண்ணிக்கொள்கிறார்கள்; எண்ணிக்கொள்ளும்படி, அதிகாரியும் சீமானும் போட்டியிட்டுக்கொண்டு சொல்லி வைக்கிறார்கள்.

அமைச்சர் பேசுகிறார்! செ! என்ன துடுக்குத்தனம், பார், தம்பி! எனக்கு—பேசுகிறார் என்று சொல்கிறேன். அமைச்சர் பேசுவாரா? சொற்பொழிவாற்றுகிறார். தாக்குகிறார்! தகர்க்கிறார்! முகமூடியைக் கிழிக்கிறார்! எச்சரிக்கை விடுக்கிறார்! எதிர்க்கட்சிகளை!!

கேட்டிடும் சீமான், எந்த இடத்திலே மட்டும் கைகொட்டவேண்டும் என்பதை அறிந்து அதன்படி நடக்க, எத்தனை பாடுபடுகிறார் தெரியுமா தம்பி!

ஏழைக்கு வியப்பாக இருக்கிறது. நாம்தான், அகவிலையால், வரிச்சுமையால், வறுமையால் பிணியால், அவதிப்படுகிறோம்; கோபம்கூட வரத்தான் செய்கிறது; இவருக்குப் பாபம் எதற்காக இத்தனை ஆத்திரம்! இவரே சொல்கிறார், எதிர்ப்பாளர்கள் விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள், மிகச் சிலர் என்று; அது உண்மையானால், இவர் எதற்காக, யாரோ உச்சியைப் பிடித்துக் குலுக்கிடுவதுபோல ஆத்திரப்படுகிறார்— என்றெண்ணி வியப்படைகிறான். ஏழைகள் ஈடேற வழி சொல்லுவார் என்று எதிர்பார்க்கிறான்! சொற்பொழிவின் இறுதியில், எதிர்க் கட்சிகளை எல்லாம் கொன்று குவித்துத் தம் காலடியில் குவியலாகப் போட்டுக்கொண்டான பிறகு, அமைச்சர், ஏழை எளியவர்கட்கும், ஈடேற வழி சொல்கிறார்.

வயிற்றை இறுக்கிக் கட்டுங்கள்
வரி கட்டத் தயங்காதீர்கள்.

கஷ்டம் கஷ்டம் என்று கதறி, காலம் கடத்திட வேண்டாம்.

பல்லைக் கடித்துக்கொண்டு பொறுமையாய் இருங்கள் பொழுது விடியும்.

திட்டம் இரண்டு மூன்று நிறைவேற வேண்டும்; பிறகே கஷ்டம் போகும்.

காங்கிரசை ஆதரியுங்கள்! கண்டது கேட்டுக் கெட்டுப் போகாதீர்கள்.

காந்தியின் கட்சி எங்கள் கட்சி! உங்களைக் காப்பாற்றுவது இந்தக் கட்சி.

எதிர்த்தால் சும்மா விடமாட்டோம்; எம்மிடம் படைபலம் மிக அதிகம்.

ஏழை பணக்காரன் என்று பேதம் பேசிப் பாழ் ஆகாதீர்.

இருப்பவனிடம் இருந்தால்தான் இல்லாதவனுக்குத் தருவான். இதுதான் எங்கள் சமதர்மம்! இதை எங்கும் நீங்கள் காணவில்லை.

வந்தேமாதரம்! ஜேஇந்து! வருகுது தேர்தல். ஓட்டுக் கொடு!

'வந்தே'—என்று அமைச்சர் துவக்கும்போதே, அதிகாரி, அமைச்சருக்கு வழி அமைக்கும் அலுவலில் ஈடுபடுகிறார்; சீமான்கள் அமைச்சரை நெருங்குகிறார்கள்; இரண்டொருவரிடம் பேசுகிறார் அமைச்சர், பொருளற்றதை; அமைச்சரின் பேச்சுக்குப் பொருள் கண்டுபிடித்துப் பூரிப்படைகிறார் சீமான்; தொழுவத்திலுள்ளதைப் பார்ப்பதுபோல, தொலைவிலுள்ள ஏழைகளை அமைச்சர் பார்க்கிறார்; தலையைக் கணக்கெடுக்கிறார், அவர்கள் வயிறு காய்வதைக் கவனிக்க மறுக்கிறார்.

மருமகன் விஷயம்?
கவனமிருக்குது!
மாட்டுச் சந்தை?
கேட்டுப் பார்க்கிறேன்!
இங்கா? அங்கா? எங்கு நான் நிற்க?
சொல்கிறேன் சீக்கிரம், நல்லபடி அமையும்.
கழகக்காரர் கொட்டம் அடக்க.........
கையாலாகவில்லையோ உம்மால்!
கூட்டம் சேருது அமர்க்களமாக.........
ஓட்டுச் சேர்க்கும் வழியைப் பாரும்.

விதைப்பண்ணைக்கு விட்ட நிலத்தின் விலையைக் கொஞ்சம் கூட்டித் தரச் சொல்லி............

உத்தரவு விரைவிலே வரும். உம்முடைய பங்கு, தேர்தல் நிதிக்கு உடனே அனுப்பி வைத்திடும். ஆமாம்.

இப்படிப்பட்ட உரையாடல்கள்! நடந்தபடி! மோடாரில் உட்கார்ந்தபடி! மோடார் புறப்படுகிறது! ஜே போடப் படுகிறது! தூசி கிளம்புகிறது! சீமான்கள், உடையை உதறிக்கொள்கிருர்கள். ஏழைகள் அதுவும் செய்ய வில்லை. கூட்டம் கலைகிறது! பத்திரிகையில் பக்கம் பிறகு நிரம்பி வழிகிறது, நிகழ்ச்சி குறித்து.

தம்பி! இந்த முறையன்றி வேறு எந்த முறை யிலே நடக்கிறது அமைச்சர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள்! இதிலே பற்றும் பாசமும் காணமுடியாது; பயமும் நயமும் காணப்படும்; ஒட்டும் உறவும் இருக்காது, உசாவல் உராய்தல் இருக்கும்; கண்களில் கனிவு இருக்காது, பார்வையில் பசி நிறைந்திருக்கும். பளபளப்பு மிகுந்திருக்கும், பரிவு மிகவும் குறைந்திருக்கும். அதிகம் சொல்வானேன், தம்பி! இது உணவு விடுதிச் சாப்பாடு! வீட்டுச் சாப்பாடு அல்ல! உண்டவரும் தந்தவரும் கொடுத்ததையும் கொண்டதையும் கணக்கெடுக்கும் போக்கினரே — உள்ளம் உள்ளத்துடன் உறவாடும் நிலையினர் அல்லர். எனவேதான் அந்த நிகழ்ச்சிகளிலே, ஒரு கலகலப்பு இருப்பதில்லை; களிப்பு மலர்வதில்லை; காகிதப் பூவாக, கல்லுருவமாக இருக்கிறது! தம்பி! நம்முடைய கழக நிகழ்ச்சிகள் அவ்விதமல்லவே! கடல் கடந்து சென்று திரும்பிவந்த தலைமகனை, குடும்பம் வரவேற்றுக் குதூகலித்து உரையாடி, இல்லம்தனில் உள்ள எழிலை எல்லாம் எடுத்துரைத்து, இன்பம் ததும்பும்படி எதை எதையோதான் பேசி மகிழ்ந்து உறவாடும் முறையன்றோ காண்கின்றோம், நம் கழக நிகழ்ச்சிகளில். பொருளற்றதா இந்தப் போக்கு? பயனற்றதா இந்த நிலைமை? கருத்தற்றவரன்றி வேறெவரும் இதனை உணராதிருக்க முடியாது.

களிறும் காட்டெருமையும் கடுவனும் கரடியும், கொல்லும் புலியும் பிறவும் உலவும், காடு சூழ் குன்று பல சென்று வந்தேன்—பத்து நாட்களுக்கு முன்பு.

வளைந்த பாதைகள்! வழுக்கல் பாறைகள்! அடர்ந்த புதர்! ஆபத்தான அடவிகள்! இங்கெலாம் சென்றிருந்தேன், எழில்காண அல்ல, தம்பி! காடு சூழ் இடமாம் பருகூர் மலையினில் கொடியும் கண்டேன், கன்னடம் பேசும் படுகர் கழகம் நடத்தக் கண்டேன், குளிர்மிகு 'குந்தா'தன்னில் கூடிய தோழர்மாட்டு, கொள்கையின் ஆர்வம் கண்டேன், கொள்ளை இன்பம் உண்டேன், கோத்தகிரிக்குச் சென்றேன் கூடினர் பெரியோர், இளைஞர்; அனைவரும் பேசும் மொழி, அருமைக் கன்னடம்தான், தம்பி! அங்கெலாம் கழகம், ஆமாம்! அவரெலாம் அண்ணா என்றே அன்புடன் அழைக்கக் கேட்டு, அவன் எனக்கு எப்படி அண்ணனுவான்! ஒட்டென்ன உறவு என்ன? ஒருதாய் வயிற்றிலா உதித்தோம் என்று கற்றது பேசிக் காழ்ப்பைக் கக்கிடும் போக்கினர்போல், காடுடை இடத்திலுள்ளார் இல்லை, அவரெல்லாம், அன்பினைச் சொரிகின்ருர்கள், ஆதரவளிக்கின்ருர்கள், நாளையோ மறுநாளோதான் நமது விடுதலைக்கான போரினைத் தொடுக்கவேண்டி நேரிடும் என்ற நெஞ்சினராக உள்ளார்! கொஞ்சமா, அவர்கள் அன்பு!! கொடுத்தது என்ன அவர்கட்கு, நான்? பெற்றதோ பாசம், நேசம்! இதனை நான் பெற்ற பின்னர், எது இழப்பினுந்தான் என்ன? சுரங்கம் நிரம்பி உளது, பாலங்கள் பறி போனலும்! களஞ்சியம் புகுந்து நெல்லைக் களவாடிச் சென்றிட்டாலும், வளமிகு வயலும் இங்கே வகையாக, உளது தம்பி! அல்லியைப் பறித்துச் சென்ருர், அழகு நீரோடை, அரும்புடன் இருக்குதப்பா!! அதனை நாம் இழந்தோமில்லை. கழகத்தின் கொள்கை இன்று காடு சூழ் இடங்கள்கூட நுழைந்துளது, தம்பி! உழைப்பு வெற்றி தந்துளது!!

கொட்டுதே மாற்ருர் நாக்கு! கொடுவாளாகி வெட்டுதே பிரிந்தோர் போக்கு! என்றெலாம் எண்ணமிட்டு, ஏக்கம் நான் கொண்டிட்டாலும் எங்கும் நான் காணும் காட்சி மாமருந்தாகி என்னை, களிப்பூரில் கொண்டு சேர்த்து காண் என்று கூறக்கேட்டேன்.

சுற்றுலாவந்தபோது சிற்றூர்கள் பலவும் கண்டேன் — சிரித்தமுல்லை கொல்லையில் காணும் மங்கை, விடுவளோ, பறித்திடாமல்; அதுபோல், போனது சரிதான் அண்ணா! பொருள் என்ன கொண்டுவந்தாய் என்று பொருள்நிறைச் சிரிப்பைக் காட்டிக் கேட்டிடத் தம்பி உண்டே! பொருளாளர்! எனவே பொருளும் சிறிதளவு பெற்றுப் பெரிதும் நான் மகிழ்ச்சியுற்றேன். எங்கும் நான் கண்ட காட்சி, எவர் உள்ளமும் மகிழும் வகையே! கோவை மாவட்டந்தன்னில், கோபமோ இவர்க்கு என்று எவரும் எண்ணிடும் வகையிலே காணப்படுபவர், கொள்கை காப்போர், உடுமலை நாராயணனுடன், பொருள்பெறத்தக்க நல்ல புன்னகை முகத்தில் காட்டிப், பொறுமையை அணியாய்ப் பூட்டித், தொண்டாற்றிடும் இளைஞர் தேவசகாயம் கூடி, என்னை அழைத்துச் சென்ற ஊர்களின் எண்ணிக்கை மறந்து போனேன் — எங்கும் நான் கண்ட ஆர்வம் என்றுமே மறப்பேன் அல்லேன். ஆங்கொரு சிற்றூர் தம்பி! உடுமலைப்பகுதி! ஆமாம்! பகலிலே ஊர்வலம்! பரிவு நிழலளிக்க, பாசம் உடனிருக்க, பல்லோர்கள் வந்தார்கள். மேடைநோக்கி, நானிருந்த வண்டி நகர்ந்தது, ஓட்டவில்லை. ஓடோடி வந்தார் தோழர்! ஒருகணம் அண்ணா! என்ருர்! நான் இந்த ஊர்க்கழகத்தின் பொறுப்பாளன், இதனைக்கேளும், அண்ணனைக் காண ஓடிவருகிருள் என் துணைவி. அண்ணா! நின்று ஓர்கணம், அன்னவளின் அஞ்சலி ஏற்றுக்கொள்ளும். என்னுடைத் துணைவி யாரோ என்று எண்ணிட வேண்டாமண்ணா! சென்னையம்பதியிலுள்ள செல்வி அனந்தநாயகியின், தங்கையே எந்தன் தாரம்! என்று கூறுகின்ருர். வந்த மங்கையும் வணக்கம்கூறி, செண்டுகைக்கொடுத்துவிட்டுச் சென்றிடக் கண்டேன் — என்ன இவ்வன்பு வெள்ளம் இத்துணை வேகமாக, எங்கெங்கும் கொழிக்கின்றதே என்று எண்ணிப் பெருமிதம் கொண்டேன், தம்பி!

இவ்விதமாகவெல்லாம் இணையில்லா இன்பம், அன்பு, ஈட்டி என்முன்னம்கொட்டி, எடுத்தேகு அண்ணா என்று எண்ணற்ருேர் கூறும்போது, பண்டிதர் பதைபதைக்கப் படுகளம் ஆவதெனினும் பார்க்கிறேன் ஒருகை என்று பண்பற்றுப்பேசும் பேச்சு, எனக்கென்ன கலக்கந்தனையா, ஏற்படுத்திட இயலும்? வெறும் கேலிக் கூத்து! பாரெலாம் பஞ்சசீலம் பரவிடவேண்டுமென்று நாநலமிக்க பேச்சுப் பேசிடும் பண்டிதர் நேரு போரில்லை பொறுப்பற்றதோர் போக்கோ செயலோ இல்லை, போற்றிடுகின்றோம் நாட்டை, மீட்டிட உறுதிகொண்டோம், அறநெறி நின்று என்று கூறிடும் நம்மைநோக்கி, உன்

நாட்டுப்போரும்கூட மூண்டிடுவதாயின், நான், உமக்கொரு நாடுதாரேன், உறுதி, இதுஅறிவீர் என்று உரத்த குரலெழுப்புகின்றார் — உ ள் ள த் தி ல் குழப்பம் மூண்டதாலே! இதனை நான், அன்பு சொரிந்திடும் குழாத்திடை இருந்தகாலை எண்ணிக்கொண்டேன்—மிரட்டிடும் பேச்சைக்கேட்டு, மிரண்டிடுவாரோ சிலர் என்று—தம்பி! அதுதான் இல்லை! தம்பிகள் சிலர் போனார்கள், கழகத் தகுதியும் உடனே போச்சு! இங்கு இனிக் கழகம் தன்னைச் சீந்துவார் எவரே என்று ஏ ள ன ம் பேசினரே, ஏமாளிகளானோர் சில்லோர், பார் நமது திருவிடம் காட்டும் கோலம் புரிந்தது பண்டிதர்க்கு, பகற்கனவு என்றார் பழுக்கா பான்மையினர் சிலரும், பண்டிதர் உணருகின்றார், பரணியாகித் தரணியெங்கும் பரவிடும், திராவிடநாடு திராவிடருக்கே என்னும் கொள்கை, வளர்ந்துள்ள வகையும் அளவும். ஆகவேதான் அவரும் அச்சம் மிகவும்கொண்டு அச்சுறுத்துகின்றார்; அழித்திடுவேன் படையால், அமளிக்கும் த யா ர் என்கின்றார். காட்டுவது எதனை, இந்தக் காட்டுப்பேச்சு? கண்மூடி இருந்துவிட்டோம் இயக்கம் இறந்துபடும் தானாக என்றெண்ணி ஏமாந்துபோனேம்; இல்லை! இல்லை! இவ்வியக்கம் எங்கெங்கும்பரவும்போக்கு ஏதேனும் ஆபத்துண்டாக்கும்; எ ன வே, இதனைப் பலமாகத் தாக்கவேண்டும், என்று எண்ணுகின்றார் பண்டிதர் என்பதன்றோ பொருளாகின்றது. தம்பி! பட்டபாடு வீண்போயிற்றா! இதோ, ப ண் டி த ர் பதைத்து எழுகிறாரே! பகற்கனவு என்றா அவரும் பரிகாசம் பேசிவிட்டு, பாடிக்கொண்டே பருகுவோம், பருகிக்கொண்டே பாடுவோம் என்று ஆகிவிட்டார்! இல்லை, தம்பி! நான், காடும் மேடும் சுற்றிப் பட்டிதொட்டியில் பேசி, கண்டிடும் காட்சிகள் மொத்தமாய்த் தந்திடும் நிலைமை விளக்கமது நேருபண்டிதர்க்குத் தெரிந்துவிட்டது; புரிந்துவிட்டது! இனி, இரண்டில் ஒன்றுதான்—நம்மை அடியோடு அழிப்பது, அல்லது நமது கொள்கைக்கு மதிப்பளிப்பது.

இத்துணை வீரமுழக்கமிட்டவரா, இறங்கிவருவார் என்று கேட்பது பு ரி கி ற து, தம்பி! ஆனால் இதனைக் கேள், ஏறினோர் இறங்கவேண்டும், மேலும் ஏறிட இடமில்லாதபோது! பண்டிதர் போக்கு, பழைமை அறிந்தோர்க்குப் பயமூட்டாது! வேகப்பேச்சு, அ வ ரு க் கு வெல்லக்கட்டி; கரைந்துபோகும்!! ஆகாதென்பார்! ஆர்ப்பரிப்பார்! அரிமாபோலக் குரல் எழுப்பிடுவார்! எல்லாம், கட்டம் ஒன்று, முடிவல்ல!! கதையை அறிந்திட வழி சொல்லிடுவேன். பாகிஸ்தானை ஜின்னா கேட்டபோது, பதைபதைத்தது கொஞ்சமா? பகைகக்கியது சாமான்யமா? கட்டம் ஒன்று!! கண்டோமே! இறுதியில் நடந்தது என்ன, தம்பி! கராச்சி தலைநகர் ஆயிற்று, காயிதே ஆஜம் வெற்றியுடன் கண்டார் பாகிஸ்தான்; க ண் டோ ம்!! உள்நாட்டுப்போர் மூண்டிடட்டும் ஒரு போதும் பாகிஸ்தானுக்கிணங்கேன்! உறுதி! காந்திமேல் ஆணை! என்று கூறினார், அறிவாயா! கேட்டுச் சிரித்தார், ஜின்னாவும்.

அந்தப் போக்கு இம்மிகூட மாறிடக் காணோம்; அனுபவம் பாடம் தருமாம்; அது இங்கு தென்படக் காணோம்.

அணுகுண்டு யுகத்தினிலே ஆகுமா பாகிஸ்தான், தனிநாடு என்று ஆர்ப்பரித்தார் பண்டிதர். கொண்ட கொள்கையை மாற்றிடவோ, கோணல் பாதை புகுந்திடவோ, கோல்கொண்டோர் முன் குதித்தாடிப் பண்டம் பழமும் பெற்றிடவோ, சிற்றறிவினரா ஜின்னாவும்? சீரழிக்கவா அவர் வந்தார்? பாகிஸ்தான் எம் பிறப்புரிமை அதனைப் பெற இயலாதேல், கபுர்ஸ்தான் எம் இருப்பிடமாப், ஆகட்டும் கவலை இல்லை, எனக் கர்ஜித்தார்! காங்கிரஸ், குரலை மாற்றிற்று.

இந்தியா என்றென்றும் ஒரு நாடாய்
இருந்திடச் செய்வதே காங்கிரஸ் திட்டம்.
எனினும் ஏதோ ஓர் பகுதி, இருந்திடமாட்
டேன் இந்தியாவில், எனக்கோர் அரசு தனி
யாக இருக்கவேண்டும் எனப் பி டி வா த ம்
பிடிக்குமானல், என் செய்வோம்! தடுத்திட
மாட்டோம், உமதிஷ்டம்! தனி நாடாகப் பிரிந்
திடு, போ! எனத் த ய க் க மி ன் றி ஒப்புக்
கொள்வோம்; தத்துவம் இதுவே அறிவீர்
என்றார் தலையே போவதானாலும் தரவேமாட்
டேன் பாகிஸ்தான் எனத் தர்பார் பேச்சுப்
பேசிய பண்டிதர், நேரு.

தம்பி! அது வேறு காலம், என்று கூறுவார் உளர். பிறிதோர் சமயம் அதுபற்றி என் கருத்தைத் தெரிவிக்கிறேன். இப்போது, இது விளக்கமாகிவிட்டதல்லவா,

கழக வளர்ச்சி வேகமுடன்
காணுமிடம் எங்கும் எழுச்சி,
எழுச்சியின் அடிப்படை நெஞ்ச
நெகிழ்ச்சி,
நெகிழ்ச்சிக்குக் காரணம், பாசம், பற்று,
பாசம் பற்று இல்லை வேறு எவ்விடமும்
அவ்விடமெல்லாம் வெறும் வியாபாரம்,
கணக்கர் போனால் கடை போகும் என்று
கருதிய நிலை இன்றில்லை,
காடுசூழ் சிற்றூர் எல்லாம், கழகம் கண்
டனர் நம் தோழர்,
கழக நிலையை அறிந்ததால் கலக்க
மடைந்த பண்டிதர் கலக்கப் பார்க்கிறார் நம்
மனதை, உள்நாட்டுப் போர் வருமென்று
கூறி.

ஆனால், தம்பி! உள்நாட்டுப் போர் என்பதெல்லாம், உதட்டுப் போர்தான்! வேறொன்றுமில்லை. எங்கும் பூத்திருக்கும் வண்ண மலர்களை, காம்பு உடையாமல், இதழ் கெடாமல், பக்குவமாகப் பறித்தெடுத்து மாலையாகத் தொடுத்திடுவதுபோல, எங்கணும் காணப்படும் எழுச்சியினைப் பக்குவமாகக் கூட்டுச் சக்தியாக்கி, வருகிற பொதுத் தேர்தலிலே, நம் கழகம் வெற்றிபெற,

முனைந்து நின்று பணியாற்று, முறிந்து போகும் பண்டிதர் முடுக்கு.

தேர்தல் குறித்துத் திட்டமிட்டு, திரட்டிடு பேராதரவு! தெருத்தெருவாகச் சென்றிடலாம், தெரிவித்திடலாம், காங்கிரசாட்சியிலே, விளைந்துவிட்ட கேடுபாடுகளை. ஒன்ரு இரண்டா அவை, தம்பி! அடுக்கடுக்காக உள்ளனவே! ஒன்றை எடுத்துக்கொண்டாலே, நன்ருய் விளக்க நாள் ஆகும். உள்ள நாட்கள் மிகக் குறைவு; கொள்ளை வேலை இருக்குதப்பா! வேறு நினைப்புகள் வேண்டாம் இனி, வெற்றிகாண வழி தேடு! உதயசூரியன், நம் சின்னம், ஊரெங்கும் அறிவித்திட, முன் வருவாய். நீயே அறிவாய் என்ருலும் நானும் அறிவேன் என்றுணர்த்த, தம்பி! சில நான் தொகுத்தளிப்பேன், தரமுடன் அதனைப் பயன்படுத்து; துண்டு விளம்பரம் ஆக்கலாம், சுவரொட்டிகளும் ஆக்கலாம், சிந்துகளாக்கிப் பாடிடலாம், செய்முறை, உன்திறம், விட்டுவிட்டேன். கேட்டிடு, கூறிட, கருத்துரையை:

சோறு தின்பவர் சோம்பேறி எனச்
சொல்லுகிருர் நேரு பண்டிதரும்.
'ஓட்டு' கேட்கும் காங்கிரசார்
உண்பது என்ன? கேட்டிடுவீர்!

கோட்டை கொத்தளம் கட்டினவர்
கோபுரம் பலப்பல எழுப்பினவர்
மாடமாளிகை அமைத்தவர்கள்
சோறு தின்பவர், நம் இனத்தார்.
சோம்பேறிகளோ, அவர்களெலாம்?

கண்டவர் மெச்சும் காவியமும்
கண்ணைக் கவரும் ஓவியமும்
வளர் தரும் தொழில்கள் வகைவகையாய்
கண்டவர் தமிழர்! சோறுண்டார்!
அவர்தமை ஏசும் காங்கிரசை
ஆதரிப்பது அறமாமோ?

அருந்தமிழ்நாட்டை ஏசுகிருர்
ஆளுங் காங்கிரஸ் கட்சியினர்
அவர்க்கோ 'ஓட்டு'! ஐயயோ!!

* • *

'செக்கு' இழுத்த சிதம்பரனுர் வளர்த்த,

காங்கிரஸ்

இன்று

'செக்கு' தரும் சீமானிடம்

பல்லிளிக்குதே!

வெட்கம்! வெட்கம்! என்று காலம்,

காரித்துப்புதே!

விலங்கொடித்த வீரர்களே!
விம்மிப் பயன் என்ன?
வீறுகொண்டெழுந்திடுவீர்
மரபு காத்திட!

'உதயசூரியன்' ஒளியை நாடு பெற்றிட,

'ஓட்டு'களை அளித்திடுவீர்
புதுவாழ்வு பெற்றிட!

• • *

காத்திருந்தவன் பார்த்த பெண்ணை
நேத்து வந்தவன், கடத்திச் சென்ற
கதையைப் போலக் காங்கிரசாட்சியில்
கஷ்டம் தீரும் என்று ஏழை காத்திருக்கையில்
கள்ளமார்க்கட்காரன் வந்து அடித்தான்
கொள்ளை!! கையைத் தலையில் வைத்தழுதான்
உழைக்கும் ஏழை!
உழைத்தலுத்த உத்தமனே! அழுதது போதும்!
உதிக்குதுனக்காகவே 'உதயசூரியன்'.
இன்ப ஒளி பெற்றிட நீ வாராய் என்று
அன்புடனே அழைத்திடுது, தி. மு. கழகம்

* * •

புஞ்சை, நஞ்சை ஆச்சென்ருர்,
புதுப்புதுப் பாசனம் பார் என்ருர்,
விளையுது நெல்லு மலைபோல என
விளம்பரம் பலமாய்ச் செய்திட்டார்,
விளைச்சல் அதிகம் ஆனபின்பு
விலைகள் விஷம்போல் ஏறுவதேன்?
வீட்டைத் தேடிக் காங்கிரசார்
ஓட்டுக்கேட்க வரும்போது

விளக்கம் கேட்பீர், தோழர்களே!
திருவிடம் விடுதலை பெற்றிடவே
தி. மு. கழகம் ஆதரிப்பீர்!
'உதயசூரியன்' உம் சின்னம்
உலகு தழைத்திடச் செய்வதுவும்
'உதயசூரியன்' உணர்ந்திடுவீர்!

* * *

எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஏட்டினில்!

இந்தி குட்டக் குனியும் குணக்கேடர்கள் நாட்டினில்!

கடன் பட்ட நாடு காவல் இல்லா வீடு

விழி இழந்தும் வாழலாம்
மொழி அழிந்தால் வாழ்வில்லை.

தட்டிக்கேட்க ஆள் வேண்டாமாம்
தாள் வேண்டாமாம், கதவுக்கு!

உரிமை இழந்த நாடு உயிரற்ற வெறும் கூடு

சாக்காடு மேல் என்று புலம்பும் நிலை
பூக்காடு எனப்புலவோர் மொழிந்த நாட்டில்.

சங்கம் கண்டார், முன்னவர், தென்னவர்
பங்கப்படுகிறோம், இன்று அவர், வழி வழி!

வாளும் வேலும், முன்னோர் கரத்தில்
தலையும் வலையும் இன்றுளார் கரத்தில்!

இனத்துக்குள்ள இயல்பினை
எவரே அழிக்கவல்லவர்கள்?

* * *

அரிசிச் சோறு கூடாதாம்!
அறிவிக்கிறார் இப்போது;
ஆளக் காங்கிரஸ் வந்திட்டால்
அழியும் நெல்வயல் அறிவீரே!

கோதுமை விளைவது வடநாட்டில்
கோதுமை சாப்பிடத் தூண்டுகிறார்
கோதுமை சாப்பிட நாம் முனைந்தால்
கோடி கோடி பணம் வடக்குக்கு.

ஓட்டுச் சாவடி போகுமுன்பு
ஒரு கணம் இதனை யோசிப்பீர்
உழவுத் தொழிலைக் காத்திடவே
'உதயசூரியன்' ஆதரிப்பீர்!

*

அமெரிக்கா தரும் பால் பவுடர்
இலவசம்! ஏழைக் குழந்தைகட்கு!
அதுவும் கள்ளமார்க்கட்டு, வந்து
விற்குது! காரணம் யார்?

பிச்சை எடுத்தார் பெருமாளு
அத்தைப்பறித்ததாம் அனுமாரு
எனக் கொச்சை மொழியிலே கூறுவரே
இது அதுபோலத்தானே இருக்கு!

அமெரிக்க தூதர் கண்டிக்கிறார்
ஆளும் காங்கிரஸ் பதில் தருமா?

*

சிங்களம் ஆளும் சீமாட்டி
சிரீமாவோ கொடுமையினால்
சிறகொடிந்த பறவைகளாய்
சித்திரவதைக்கு ஆளாகி
சீரழிகிறார், நம் நாட்டார்.

அம்மாவுக்கு மாம்பழம்
ஐயா கொடுக்கிறார் பரிவோடு!
ஆலாய்ப்பறக்கும் தமிழர்களை
அடித்து நொறுக்குவது அம்மாதான்!!
ஐயாவுக்குக் கவலை இல்லை, ஆமாம்,
அவர் வடநாடு!!
வதைபடுவது இலங்கையிலே,
திராவிடராம். [வாழ்விழந்த

திராவிடர் வாழப் பாடுபடும்
தி. மு. கழகக் கரம் வலுத்தால்
தீரும் துயரம் இலங்கையினில்!

இலங்கைத் தமிழர் துயர் துடைக்க
சிங்கத் திராவிடத் தோழர்களே!
பொங்கி எழுவீர்; வந்திடுவீர்
பொதுத்தேர்தல் வருகுது விரைவினிலே

பொல்லாங்கெல்லாம் அழிந்திடவே
புதுமை வாழ்வு செழித்திடவே
போட்டிடுவீர் உம் ஒட்டுகளை
'உதயசூரியன்' அழைக்கின்றான்.

•

இவைகளையும் இவை போன்றவைகளையும் எடுத்துக் கூறி, நாட்டினருக்குக் கருத்து விளக்கமளிக்க நாட்கள் அதிகம் இல்லை, தம்பி! நாட்கள் அதிகம் இல்லை!

எவரெவர் எந்த எந்தத் தொகுதி என்பதும் அறிவிக்கப்படவில்லையே, என்பது குறித்துக் கவலைப் படாதே. உன் கடமை 'உதயசூரியன்' வெற்றிக்காகப் பாடுபடுவது. எனவே, தம்பி!

உறங்கும் உலகை எழுப்பிவிடும்
உதயசூரியன்!

உலகு தழைக்க ஒளி தருவது
உதயசூரியன்!

உழைப்பவர்க்கு உரிய சின்னம்
உதயசூரியன்!

உமது வாழ்வு மலரச்செய்வது
உதயசூரியன்!

இருளகற்றி எழிலளிக்கும்
உதயசூரியன்!

இன அரசு விருப்புவோர்க்கு
உதயசூரியன்!

திருவிடத்தின் விடுதலைக்காம்
உதயசூரியன்!

தி. மு. கழக தேர்தல் சின்னம்
உதயசூரியன்!

ஓட்டு போட ஏற்ற சின்னம்
உதயசூரியன்!

நாட்டினரே! போற்றிடுவீர்!
உதயசூரியன்.

ஞாயிறு போற்றுதும் என்று
கூறினான்றே இந்த
ஞாலம் போற்றும் பேரறி
ஞன், இளங்கோவும்! அந்த
ஞாயிறு இல்லாவிட்டால்
ஞாலம் ஏது?

உயிர்களுக்கெல்லாம் உற்ற தோழன்
உதயசூரியன்.

அரும்பை மலரச் செய்பவனும்
உதயசூரியன்.

அனைத்துக்கும் ஒளி ஊட்டுபவன்
உதயசூரியன்!

அகிலம் ஆளும் வலிமை பெற்றோன்
உதயசூரியன்!

பொங்கிடும் வளத்தைத் தந்திடுபவனும்
உதயசூரியன்!

இதனை நாடு அறிந்து, நல்லோர் எல்லாம் நம்மவராகி, நாட்டின் நலிவு போக்கிடும் பணியில், நமக்காதரவு மிகவும் தந்திட, செய்திடல், உன் கடன் அறிவாய், தம்பி! மற்றவை தொடர்ந்து தெரிவித்திடுவேன், மரபு காத்திடும் உடன்பிறந்தோனே!

அண்ணன்,

வெட்கப்படுகிறோம்

மலர் 20] ஆண்டு சந்தா ரூ. 8 (29—10—61) தனிப்பிரதி 16 காசு [இ

நமது நிதி அமைச்சர் இருக்கிருரே! அவருக்குத் திடீர் திடீர் என்று புதுப்புது யோசனைகள் தோன்றுவதும், அவற்றை முன்பின் தாம் பேசியவற்றை எண்ணிப் பாராது வெளியிடுவதும் அவருக்கு இப்போது சிறிது காலமாக வாடிக்கையாகிவிட்டது.

நாட்டுப்பிரிவினையில் இருந்து தேவநாகரிலிபி வரையில் அவருடைய கருத்துக்கள் அவ்வப்போது மாறிக் கொண்டே வருகின்றன.

இதற்குக் காரணம் என்னவென்று நமக்குப் புரியவில்லை என்பது ஒருபுறமிருக்கட்டும். அவருக்கே இவை பற்றிய ஒரு தெளிவு இல்லை என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

ஏனென்றல், தேவநாகரி லிபியைப்பற்றித் தமிழ் நாட்டில் பேசும்போது, "தேவநாகரி லிபியாவது, அது, தமிழ் எழுத்துக்குப்பதில் வருவதாவது! நடக்கிற காரியமா? அப்படி நடக்கத்தான் விடுவோமா" என்று பேசுவார்.

அதே பொருள்பற்றி வடநாட்டில் பேசும் வாய்ப்பு ஏற்படும்போது, "தேவநாகரிலிபி முறையைச் சிறிது காலத்துக்கு ஒத்திவையுங்கள்," என்று கெஞ்சும் பாவனையில் பேசுகிருர்.

இதுபோலவேதான் நாட்டுப் பிரிவினைபற்றிப் பேச நேரிடும்போதும் இடத்துக்கு ஏற்றவாறு—சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு பேசுகிருர்.

சட்டசபைக்குள்ளே பேசும்போது (அங்கு ஓரளவு விபரமறிந்தவர்கள் இருப்பதாலோ என்னவோ) "திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கையை எண்ணிப் பத்தாண்டுகள் ஒத்தி வைத்து எங்களோடு ஒத்துழையுங்கள்" என்று வேண்டிக்கேட்டுக்கொள்ளும் பாணியில் பேசுகிருர்.

அதே திராவிட நாடு பிரிவினையைப்பற்றி வெளியே பொதுமக்களிடம் பேச நேரிடும்போதெல்லாம் (அவர்களுக்கு ஒன்றுந் தெரியாதென்ற நினைப்போ என்னவோ) "திராவிட நாடாவது, பிரிந்து போவதாவது? நடக்கிற காரியமா இது? அப்படி நடக்கத்தான் விடுவோமா" என்று வீரதீரமாகப் பேசுகிருர். அவர் மட்டுமல்ல இப்படிப் பேசுவது. அவரது சகாக்களேகூடச் சந்தர்ப்பம் ஏற்படும்போது சகலகலாவல்லுனர்கள் போல் பேசிவிடுகிருர்கள்.

இப்போது நமது நிதி அமைச்சர் அவர்கள் ஒரு புதுக்கருத்தை—அதனைத் தமது தேர்தல் கருத்தென்று எண்ணிக்கொண்டாரோ என்னவோ,

> "திராவிடநாடு பிரிவினை என்ற என்றுமே இல்லாத ஒன்றுக்குத் தமிழன் ஏன் இடந்தரவேண்டும்?"

என்று பேச முற்பட்டிருக்கிருர். இந்தப் பெரிய பேச்சுக்கு நமது மராமத்தார் துணைப்பேச்சு வேறு வழங்கியுள்ளார், அவர்,

> "திராவிடநாடு கேட்பவர்கள், பிறகு பாண்டிய நாடு, சேர நாடு, சோழ நாடு என்று கூடக் கேட்பார்கள்"

என்று தமது ஆராய்ச்சியின் முடிவை வெளியிடுவது போல் பேசியிருக்கிருர்.

திராவிடநாடு என்ற ஒரு தனி அமைப்பு என்றுமே இல்லாத ஒன்று என்கிருர் அமைச்சர். அவர் ஒருக்கால் தமிழ் நூற்களைச் சரிவரக் கற்று, அவை கூறும் வரலாற்றுண்மைகளை தெரிந்துகொள்ளாத—தெரிந்துகொள்ளும் வாய்ப்பில்லாத—தெரிந்துகொள்ள விரும்பாத காரணத்தால் இப்படிக் கூறமுற்பட்டிருக்கலாம்.

ஆனல், அனுபவத்தை வைத்தாவது இந்தச் சீரிய உண்மையை ஏன் தெரிந்துகொள்ளவில்லை என்பதை எண்ணும்போதுதான் நமக்கு அவர்பால் உண்மையிலேயே இரக்க உணர்ச்சி ஏற்படுகிறது.

அண்மையில்தான் அவர் வெளிநாடுகள் பலவற்றுக்குப் போய்வந்திருக்கிருர். அந்த நாடுகளிற்பல, ஆண்டாண்டு காலமாக அடிமைப்பிடியில் சிக்கி ஆதிக்க வெறியர்களுக்கு இரையாகி மீள வழி காணது தவித்ததையும், பின்னர் தன்னுணர்வு பெற்றுத் தனித் தனி நாடுகளாகப் பிரிந்து நல்வாழ்வு வாழ்வதையும் பார்த்து வந்திருக்கிருர்.

திராவிடம்போல் பரப்பளவில் பெரிதும், மக்கள் தொகையில் பெருக்கமும், வளத்தில் சிறப்புமற்ற பலப் பல சின்னஞ்சிறு நாடுகள் எல்லாம் இன்று தனி உரிமை பெற்றுச் சுதந்தரமாக வாழ்வதை நாம் கண் கூடாகக் காண்கிருேம். அமைச்சருந்தான் காண்கிருர் என்ருலும், ஏனே அவர் உண்மையை ஒப்புக்கொள்ள ஒருப்படமாட்டேன் என்கிருர்.

திராவிடநாடு பிரிவினையை இல்லாத ஒன்று என்கிருர். இல்லாத ஒன்று என்று வாதத்துக்கு வேண்டுமானல் வைத்துக்கொண்டு பார்த்தாலும், இல்லாதது இனி இருக்கக்கூடாதுஎன்று ஏதேனும் விதியிருக்கிறதா?

சிரியாவும், சைப்பிரசும், கடங்காவும், காங்கோவும் பிறவும் இதற்கு முன் தனித்தா இருந்தன? இன்று சுதந்தரமாக வாழவில்லையா?

ஆனல், திராவிடம் அப்படியல்லவே, காலாகாலமாகத் தனித்திருந்து தரணி ஆண்ட நாடாயிற்றே! இடையில் ஏமாந்ததால் அந்தத் தனிமை இல்லாது போயிற்று. அதற்காக வருந்தி இழந்ததைப் பெறமுயலும்முயற்சியில் ஒத்துழைக்கும் மரபில் தோன்றியஒருவர்,

> இல்லாததை ஏன் கேட்கிருர்கள்

என்று பேசுவது? இது வேதனை மட்டுமல்ல வெட்கத்தையுமல்லவா ஏற்படுத்துகிறது.

புரட்சிப் பாதை

ஆர். டி. நாராயணன்

காலை மணி எட்டு. உலகம் இயங்கத் தொடங்கியது. அவன் தன் பிழைப்புக் கருவியான ஆர்மோனியத்தைக் கழுத்தில் மாட்டிக் கொண்டான். அவனைத் தொடர்ந்தாள் ஓர் எழிலரசி. கந்தை சுற்றியிருந்தாலும், தந்தத்தால் கடைத்தெடுத்தது போன்ற அவள் உடலமைப்பு வெயிலில் பளபளத்தது; கருந்திராட்சை யொத்த இருவிழிகள் ஏழ்மையின் கதையைப் படலம் படலமாகக்கூறின. மாடமாளிகையில் பிறந்து எழிற் பிழம்பாகக் காரில் அமர்ந்து, பூந்தோட்டத்தில் கேளிக்கை பலவற்றில் ஈடுபட்டு, சிட்டென ஓடித்திரிந்து, குயிலெனப் பாடி, மயிலென ஆடி வாழ்க்கை இன்பத்தினை மனக்கோட்டையால் கற்பனை செய்துபார்த்து உள்ளம் பூரிக்கவேண்டிய இவள் — பருவத்தின் விளிம்பிலே நிற்கும் இவள்— பிச்சையா எடுக்கவேண்டும் என்று தோன்றும் அவளைப் பார்த்தால்.

அவனுடைய ஆர்மோனியத்தில் மக்கள் குழாம் மயங்கியது; அவன் எழுப்பும் இன்னிசை, மக்களின் இதயத்தில் பாய்ந்தது; அவளுடைய குயிலைப் பழிக்கும் குரலில் நாடு செயலிழந்தது. இன்சையைத் தொழிலாகக் கொண்ட அவர்களால் அன்ருடம் வயிறு பிழைக்கத்தான் முடிந்தது!

சாம்பசிவம் மணியை அடித்துவிட்டுப் பூசையை முடித்தார். "சம்போ! மகாதேவா!!" என்று அவர் வாய் முணுமுணுத்தது. உடலில் துலங்கும் பளிச்சென்ற விபூதிப் பட்டைகளும், கழுத்தில்உருத்திராட்சக் கொட்டையும் அவரைப் பரம பக்தன் எனப் பறைசாற்றின. அவர் காதில் ஒளிர்விடும் வைரக் கடுக்கனும், கையில் அணிந்துள்ள மாணிக்க மோதிரங்களும், பொன் கைக்கடிகாரமும், "இவர் மிட்டா மிராசுகளின் தலைவன்" எனக் கூருமல் கூறின.

வாயிலில் திரைப்படப் பாட்டு ஒன்றைப் பாடும் இனிய குரலும், அதனேடு ஒன்றி இழைந்த ஆர்மோனியத்தின் ஓசையும் செவிக்கு விருந்தாய் அமைந்தது! சாம்பசிவத்தின் மகன் இராமனுதன் மாடியில் நின்றவாறே இசையில் ஈடுபட்டான். அவன் பாடங்களை மறந்து எவ்வளவு நேரம் இசையில் ஒன்றினுனே—திடீரென்று எட்டியைவிடக் கசந்த குரல் கேட்டதும் கனவுலகமான இசையுலகினின்றும் திரும்பினுன்.

"டேய் யாரடா அது? காலை வேளையில்...?சினிமாப்பாட்டும் கூத்தும்?',

"ஐயா, ஏதாவது பிச்சை ஐயா! காலையிலிருந்து..."

"போங்கடா போக்கத்தவங்களா ...ஒங்களுக்கெல்லாம் வேறே வேலை இல்லையா?..."

"ஐயா... என் தங்கை நேற்றிலிருந்து சாப்பிடவில்லை சாமி...!"

"டேய் போகிருயா? இல்லை, உதை வேணுமா?" கதவைப் படீரென்று சாத்திவிட்டு உள்ளே வந்தார் சாம்பசிவம்.

"பிச்சைக்காரப் பசங்க, எடுக்கறது பிச்சை... இதிலேவேற பாட்டும் கூத்தும்..."

தொடர்ந்து இசை கேட்டது. தாண்டவமூர்த்தியாக மாறினுர் சாம்பசிவம்; வாயிற்படியருகில் விரைந்த அவர் தன் மகன் கதவைத் திறந்துகொண்டு அவர்கள் இசையில் மெய்மறந்திருந்ததைக் கண்டார்.

"டேய்!...இராமா என்னடாஇது?" —தந்தைக்கு மிகவும் பயந்த மகன், மகுடிக்குக் கட்டுண்ட நாகமென உள்ளே சென்ருன்.

"ஏய் போகிறீர்களா இல்லை, நாயை விடட்டுமா?"

"ஐயா! பசி வயிற்றைக் கிள்ளுகிறதுஐயா!" அந்தத் தந்தப்பதுமை பேசிற்று.

கோபம் எல்லைமீறிய சாம்பசிவம் நாயை அவிழ்த்துவிட்டார். அந்த உயர்ந்தரக நாய் ஏழையரிடம் சீறிப் பாய்ந்தது. அவன் காலைக் கௌவிற்று; மறுகணம் இரத்தம் பெருகிற்று.

"ஐயோ! அண்ணு!" அவள் அலறினுள்.

தந்தைக்குப் பயந்த இராமனுதன் மாடியில் நின்றவாறே கண்ணீர் சொரிந்தான்.

"பூங்கொடி!"—அவள் தோளைப் பற்றியவாறே அவன் எழுந்தான்.

இரண்டு வாரங்கட்குப் பின்பு...... கல்லூரிவிட்டசமயம். இராமனுதன் காரில் இல்லம் நோக்கி விரைந்து கொண்டிருந்தான். திடீரெனக் கார் நின்றது. அவன் இறங்கி ஓடினுன். ஆம்! அதே பெண் பூங்கொடி சாலையின் ஓரமாக நடந்துகொண்டிருந்தாள்.

"இதோ...பார் அம்மா!" அவள் நின்ருள்.

"உன்னைத்தான் நான் இவ்வளவு நாட்களாகத் தேடுகிறேன். அன்று

நீங்கள் என் வீட்டிற்கு வந்ததையும், தந்தை நாயை அவிழ்த்துவிட்டதையும், அது உன் அண்ணனைக் கடித்ததையும், பார்த்தேன். அதற்காக என் தந்தையின் சார்பில் மன்னிப்புக் கேட்கவந்தேன்.''

''ஆ! மன்னிப்பா சாமி? இந்த ஏழை தங்களை மன்னிப்பதா?''

''ஆமாம்! இந்தா இந்தப்பணத்தை வைத்துக்கொள்'' முப்பது ரூபாயை அவளிடம் நீட்டினான். அவள் மருண்டாள்.

''எதற்குச்சாமி?''

''உன் அண்ணனுக்கு நல்ல மருந்தாக வாங்கிக்கொடு!''

வறண்ட சிரிப்புச் சிரித்தாள் அவள்; ''காலம் கடந்துவிட்டது ஐயா! அவர் முந்தாநாள்தான் சரியான மருத்துவவசதி இன்றி இறந்துவிட்டார்.''

''ஆ! என் தந்தையின் செருக்கு மிகுந்த செயலுக்கு உன் அண்ணன் பலியா? அடப்பாவி!''

''போகிறேன் சாமி!''

''இந்தாம்மா......உனக்குத் துணை யார்? தனியாக எங்கு செல்கிருய்?''

''...........''

''சரி இதைச் செலவிற்கு வைத்துக்கொள்'' மறுபடியும் நீட்டினுன். அவள் மறுத்தாள். அவன் முயற்சி தோல்வியுற்றது! கவலையோடு இல்லம் சென்ருன்.

''டேய்! ஏண்டா இவ்வளவு நேரம்?'' தந்தையின் மிரட்டலுக்கு நடுங்கியவாறே விடையிறுத்தான் ''இல்லையப்பா.......வந்து கார்...... காருக்குப் பெட்ரோல் போட்டுக்கொண்டு வந்தேன்.''

''சரி சரி போய் வேலையைக் கவனி.''

தாயை இழந்த இராமனுதன் தந்தை சாம்பசிவத்தின் சொத்துக்களுக்கு எதிர்கால வாரிசு. மகன் கெட்டுவிடக்கூடாது என்ற ஒரே கொள்கையோடுதான் அவனை அவ்வளவுதூரம் அடக்கி மிரட்டி வளர்த்தார் அவர். தந்தையின் கட்டுத்திட்டங்களுக்கு அவன் அடங்கினுலும், அவர் போக்கை வெறுப்பான்; அவர் இழிந்த செயல்கட்காக மனம் வெதும்பி வெட்கப்படுபவன்.

''பணம்! பணம்! பணம்! இது வேண்டுமானல் எதுவும் செய்யலாம்! எதற்கும் அஞ்சக்கூடாது. ஏழை எளியோரைக் கசக்கிப் பிழிய வேண்டும் — அதற்கே அவர்கட்கு ஏழைப்பிறவியைக் கடவுள் கொடுத்துள்ளார். பணக்காரன் எப்படி வேண்டுமானுலும் நடந்துகொள்ளலாம். அதைத் தட்டிக்கேட்பவர் யாருமில்லை'' என்னும் கொள்கை பூண்ட இழிதகையாளர் சாம்பசிவம். இக் காமவெறிபிடித்த கிழச் சிங்கத்தின் ஆசைக்குப் பலியான கற்புடைக் கன்னியர்—பருவ மங்கைகள் பற்பலர்!

நாட்டு மக்களிடம் பொருளாதார சமத்துவம்வேண்டும். ஏழை பணக்காரன் கூடாது; உழைப்பவனுக்கே ஊதியம். பணம் என்னும் இரும்புத் திரைக்குப் பின்னுல் நடைபெறும் அட்டூழியங்கள் ஒழியவேண்டும்; ஏழையர் வாழ்வு வளம்பெறவேண்டும். எனும் அரும்பெரும் இலட்சியம் பூண்டவன் அவர் மகன்.

நாட்கள் கடந்தன. ஏழைப் பூங்கொடி தனியாகவே தன் வயிறு பிழைக்கச் சுற்றியலைந்தாள். அவன் வீட்டின் வாயிலில் வந்து பாடத் துவங்கியதுமே தந்தை ஏது செய்வாரோ என்ன செய்வாரோ என்ற எண்ணமும், நாயை அவிழ்த்து விட்டால்...என்ற பயமும் அவனை ஆட்டும். உடனே மேலிருந்தவாறே நாலணு நாணயத்தை அவளருகில் போடுவான். நன்றியறிதலோடு வணங்கிச் செல்வாள் அவள். இதெல்லாம் சாம்பசிவத்திற்குத் தெரியாது!

அன்ருெருநாள் காலை மணிபத்து. இராமனுதன் கல்லூரிக்குச் சென்றுவிட்டான். தேனினும் இனிய குயிலைப் பழிக்கும் குரல் கேட்டது.

''டேய் முனியா!'' சாம்பசிவம் கூப்பிட்டார். முனியனும் இல்லை.

''சனியன்கள், பூஜை செய்யக் கூட விடாமல் காலங்காத்தாலே ஏந்திருந்து கத்துதுகள், நாய்கள்'' என முணுமுணுத்தவாறே கதவருகில் சென்று அவளைத் துரத்த நினைத்தவர் ஒருகணம் அசையாச் சிலையென அப்பொற்சிலையினைக் கண்டார். திட்டம் உருவெடுத்தது. தன் சட்டைப் பையில் கைவிட்டு எட்டணு நாணயம் ஒன்றை எடுத்துப்போட்டார்.

''ஏம்மா இந்த வயதில் உனக்கு இப்படி? எங்காவது வேலைசெய்யக் கூடாது?''

''வேலை எங்கும் கிடைக்காமல் பசி வயிற்றைக்கிள்ளி, உயிரைத் துடிதுடிக்கவைத்த நேரத்தில்தான் சாமி இந்தத் தொழிலுக்கான எண்ணம் எங்கள் நெஞ்சில் ஏற்பட்டது. பல இடங்களில் வேலை தேடினேம்; ஆனல் ஒருபயனும் கிட்டவில்லை சாமி''

''நீங்க எத்தனை பேரு? 'தேடினேம்'—'எங்கள்' அப்படீன்னு பன்மையிலே பேசறயே?''

''நானும் என் அண்ணனும் சாமி; நாயை நீங்க கடிக்கவிட்டபின் பத்து நாளில் இறந்துவிட்டார்!'' அவள் விம்மினுள்.

''ஐயோ பாவம்! அன்னக்கி நான் ரொம்பக் கோவமா இருந்தேன். சரி! சரி! நான் செய்ததுக்குப் பிராயச் சித்தமா ஒரு வேலைதர்றேன். மாசம் முப்பது ரூபாய் தர்றேன்.''

அல்லியென மலர்ந்த அத்தையலின் முகம் மகிழ்வால் பன்மடங்கு அழகு பெற்றது. வஞ்சகவலை வீசுகிருர் சாம்பசிவம் — இதன் முடிவு தூக்குக்கயிருகவோ, நச்சுக் கோப்பையாகவோதான் இருக்கும்—என்பதறியாத, கள்ளங்கபடத்தைத் துளியும் நெஞ்சில் தாங்காத தூய பொற்சிலை உடனே ஒப்பி அவர்பின் சென்றது.

''சரி இங்கேயே இரு, வர்றேன்'' அறைக்கதவை அவசரமாகத் தாழிட்டார். அடுத்தகணம் அல்லிமலர் அந்த வெறிக் குரங்கிடம் சிக்கியது. பூங்கொடி அலறினுள், கதறினுள், கெஞ்சினுள்...பயன்?

கல்லூரிக்குச் சென்ற இராமனுதனின் உடல் நலம் குறைவாயிருக்கவே இல்லம் திரும்பினுன். தன் தந்தையும் பூங்கொடியும் உள்ளே பேசிக்கொண்டு இருப்பதைக் கண்டதும் துணுக்குற்ருன். மறைந்திருந்தவாறே தந்தை அறைக்கதவைத் தாழிடுவதையும் உள்ளே பூங்கொடியின் வேதனைக்குரலையும் கேட்டு வெகுண்டான். கிழச் சிங்கத்திடம் சிக்கிய அந்த எழில்மதியின் வாழ்வு பாழ்படுவதுகண்டு நெஞ்சம் குமுறினுன். ஆனுல் தந்தையின் கோபம் அடக்குமுறை ஆகியவற்றின்முன்பு அவன் தயங்கினுன்.

கண்ணீர் விட்டுக் கதறிய ஏழை—நிறைந்த துன்பத்தை நெஞ்சேந்திய அப்பாவை ஏழைகட்கு இதுதான் வாழ்வு என்பதை அறிந்துகொண்ட பூங்கொடி கண்ணீரைக் கொட்டிய வாறே வெளியேறினுள்.

''அடப்பாவி! இசையின்பத்தை அளித்து அற்பத்தொகை பெற்று

வயிற்றுக்குப் பதில்சொல்ல நினைத்த போது என் அருமை அண்ணனை, நாயைவிட்டுக் கடிக்கச்செய்தாய்—கொன்றாய். இன்று என் மானத்தை அழிக்கப்பார்த்தாய். ஏழையரை ஆட்டிவைப்பவரா பணம்பெற்றோர்? அடசண்டாளா! பணமும் பக்தனென்ற வேடமுமல்லவா உனக்குத் திரையிடுகின்றன?" எண்ணினாள் ஏங்கினாள். சாவின் எல்லையைத் தொடும் நோக்கத்தோடு வாழ்வின் விளிம்பையே கடந்துகொண்டிருந்தாள்.

மாடியில் மனம் புழுங்கியவாறு நடமாடிக்கொண்டிருந்த இராமனாதனின் உள்ளம் குழம்பியது. ஐயோ! அந்த ஏழைக் குடும்பத்தினரை வேரோடு சாய்த்துவிட்டாரே! சீச்சி! இவரா என் தந்தை? 'பணத்தாசை பிடித்தவர் — பக்தி, கடவுள், சாதி, மதம், வேதங்கள் முதலியவற்றின் பெயரால் நாட்டுமக்களையே ஏமாற்றிப் பிழைப்பவர்' என்று மட்டும் என் உள்ளத்திற்கு அறிமுகமான இவர், பெண்களைக் கூடக் கெடுக்கும் காமப்பிசாசா? — இவரா என் தகப்பன்? ஐயோ! நல்லெண்ணம் கொண்ட எனக்கா துரோக எண்ணம் மிக்க தந்தை இருக்கவேண்டும்? அட இயற்கையே!! விளக்கில் வீழ்ந்த விட்டிலெனத் துடிதுடித்தான். தாயற்ற என்னைத் தன்னுயிரையும் ஈந்து வளர்த்த தந்தையைத் தவிக்கவிடக்கூடாது—அவர் நெஞ்சம் புண்படக்கூடாது எனப் பொறுமையே உருவாயிருந்த நான் எப்படி இவற்றையெல்லாம் கண்டு பொறுப்பது? எத்தனை பெண்களின் வாழ்வு இவ்விதம் பறிபோகிறது?' ஐயோ அம்மா! அப்பா உனக்கே துரோகம் செய்துவிட்டாரம்மா! உள்ளம் குமுறினான்.

இராமனாதனின் கார் ஐம்பதுமைல் வேகத்தில் பறந்தது; அன்று பூங்கொடியைச் சந்தித்த அதே இடத்தை நோக்கிப்பறந்தது? "ஐயோ தாமதித்துவிட்டோமே! இந்நேரம் ஏதாவது விபரீதம் நேர்ந்திருந்தால்...? குடிசைகள் நிரம்பிய அங்கு பூங்கொடியின் குடில் ஏதென அவனால் அறியமுடியவில்லை; தேடினான்.

"ஐயா, பூங்கொடி என்ற பெண் பாட்டுப்பாடுமே, அவள் வீடு எது?"

"ஓ! அவங்க அண்ணன்கூட நாய் கடித்து இறந்துவிட்டாரே?"

"ஆமாம் ஐயா"-அவர் வீட்டைக் காட்டினார். பூங்கொடி வீடு மூடப்பட்டிருந்தது. கதவைத் தட்டினான் திறக்கவில்லை. உள்ளே ஏதோ ஒலி கேட்டது! கதவை உதைத்துத் திறந்தான். உள்ளே!......'ஆ! பூங்கொடி!!' பூங்கொடி தூக்கில் தொங்கினாள். உயிர்போகும்வேளை—உடல் துடித்தது! இராமனாதன் அம்பெனப் பாய்ந்தான் அவளைத்தூக்கிக் கழுத்தை இறுக்கிய துணியைத் தளர்த்தினான். மயங்கிச் சாய்ந்தாள் பூங்கொடி.

தன்நிலை அடைந்ததும் அருகே இராமனாதன் நிற்பதையும், தான் படுத்திருப்பதையும் உணர்ந்தாள்.

"ஆ! சாமி! நீங்களா?"—கடந்த சம்பவத்தை நினைத்து அவள் கண்ணீர் வடித்தாள்.

"ஆம் பூங்கொடி! நடந்ததெல்லாம் எனக்குத்தெரியும். உன்வாழ்க்கைப் பிரச்னைக்கு ஓர் முடிவுகட்டத் தான் வந்தேன் — சிறந்தமுடிவு! நீ விரும்பினால் நான் உன்னை மணந்து கொள்கிறேன்.

அவள் வியப்பும், ஆவலும், அன்பும் ததும்பும் கண்களால் அவனை நோக்கினாள். என்னென்னவெல்லாமோ கூறநினைத்தாள் — மகிழ்வு மிகுதியால் வாயில் சொற்களே வரவில்லை.

பதிவுத்திருமண அலுவலகத்தை விட்டுப் புறப்பட்ட கார் சாம்பசிவம் வீட்டின் முன்பு நின்றது. காரிலிருந்து பூங்கொடி இராமனாதனுடன் இறங்கினாள். சாம்பசிவம் அறையில் இருந்தார்.

"அப்பா! வணங்குகிறோம், எங்களை இப்போதாவது திருந்தி நல்ல உள்ளத்தால் வாழ்த்துங்களப்பா."

"ஆ! டேய்! என்னடா இது? யாரிவ?" தெரியாதவர்போல் நடித்தார்.

"இவள்தான் ஏழைப்பாடகி பூங்கொடி! தந்தை அவள் வாழ்வைக் கெடுத்தார். தனயன் அவளை வாழச் செய்தான்!" சொற்களை எண்ணி எண்ணி உறுதியோடு, கோழையாயிருந்து உள்ள உரமும் வீரமும் பெற்றுவிட்ட அவன் பேசினான்.

"அடபாவி!" — அலறிவீழ்ந்த மாமிசமலை அதன் பின்பு எழவேயில்லை.

நாட்டைச் சீர்திருத்தும் பணியில் இராமனாதனும் பூங்கொடியும் சாம்பசிவத்தின் சொத்துக்களைச் செலவிட்டனர். தான் வாழ்க்கைப் பாதையில் செய்த மாபெரும் புரட்சிபோன்று எல்லோருடைய வாழ்வும் புதுமையும், புரட்சியும் நிறைந்ததாயிருக்க வேண்டும். அதன் பயனாகச் சாதிமத பேதங்கள் வேரோடு பிடுங்கி எறியப் படவேண்டும் என்னும் எண்ணத்தோடு அயராது உழைக்கிறான்.

சீர்திருத்தவாதிகளின் பொதுக் கூட்டம் அது! மக்கள் வெள்ளம் இசையில் ஈடுபட்டிருக்கிறது. ஆம்! பூங்குழலி பாடுகிறாள்; அறிவழகனாக மாறிவிட்ட இராமனாதன் ஆர்மோனியத்தில் இசை மழை பொழிகிறான்.

சாதி வெறியர்கட்கு, மதப்பித்தருக்கு, சம்பிரதாயச் சாத்திரங்களின் அடிவருடிகட்கு அவன் பாதை, கசந்தவேம்பு-எட்டிக்காய்.

சீர்திருத்தவாதிகட்கு அது பூஞ்சோலை; எழுல் மிகுந்த புரட்சிப் பாதை.

★

வாசகர்கட்கு

8—10—61, 15—10—61, 22—10—61 ஆகிய கிழமைகளில் "திராவிடநாடு" இதழ் வெளியிடப்படவில்லை, என்பதைப் பொதுவாக வாசகர்களுக்கும், சிறப்பாகச் சந்தாதாரர்களுக்கும், குறிப்பாக நூலகங்கள் படிப்பகங்கள் (Library) ஆகியவற்றிற்கும் தெரிவித்துக்கொள்கிறோம்!

"திராவிடநாடு" கடந்த மூன்று வாரங்களாக அனுப்பப்படவில்லை, ஏன் என்று கேட்டுக் கடிதங்கள் வந்துகொண்டிருப்பதால், இந்த அறிவிப்பை இதழ்மூலம் தெரிவிக்கிறோம்.

பொறுப்பாளர்
திராவிடநாடு.

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

2-ம் பக்கத் தொடர்ச்சி

"எங்களுக்கு வேறு அலுவல் இருக்கிறது. நீ வந்த காரியத்தைச் சொல்!" அவசரப்படுத்தினன் ஒருவன்.

"நான் யாரென்று கேட்கவில்லையே நீங்கள்?"

"அட என்னய்யா இது! பிச்சை கேட்கவந்துவிட்டுப் பெருமை வேறு?"

திரும்பவும் வந்தவர் தம்மைத் தாமே பார்த்துக்கொண்டார். 'இவர்கள்தான் என்ன செய்வார்கள்! என்னுடைய கோலம் அப்படியிருக்கிறது!'

"நான்தான் முடிநாகன்!"

திக்கித் திணறிச் சொல்லிவிட்டார் அவர்.

"என்ன முடிநாகனா?"

"அட, இது வேறே முடிநாகனாக இருக்கும்!"

"முடிநாகன் என்று சொன்னவுடனே இவரைக் கதையாசிரியர் முடிநாகன் என்று நினைத்துவிட்டாயா?" ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கேலி கலந்த குரலிற் பேசினார்கள்.

"நான் அதே முடிநாகன்தான்! நீங்கள் சற்று முன் படித்துப் பாராட்டினீர்களே கதை, அந்தக் கதையை எழுதிய எழுத்தாளன் முடிநாகன் நான்தான்!"

"என்னய்யா கதை அளக்கிறே!"

"இங்கே உன் கதையைக் கேட்டு நம்பப்போகும் ஏமாளிகள் யாருமில்லை"

"எங்கே நிற்கிறோம், யாரிடம் பேசுகிறோம் என்பதை நினைவுபடுத்திக்கொண்டு பேசு"

கேலி கடுமையாயிற்று. தலைக்குத் தலை திரும்பவும் இப்படிப் பதிலிறுத்தார்கள்.

"இவர் சித்த நிலை குழம்பியவர் போலிருக்கிறது" முடிவாக ஒருவன் ஆலோசித்துச் சொன்னான்.

முடிநாகனால் மேலே பேச முடியவில்லை. உண்மையில் சித்தக் குழப்பமே அவரை வந்து ஆட்கொண்டுவிடும் போலிருந்தது.

சற்று நேரம் அமைதியாக இருந்தார் அவர். மற்றவர்களின் நம்பாமையைப் போக்கியே தீரவேண்டும் என்று எண்ணியவர்போல் திரும்பவும் பேசினார். "நான் உண்மையைத்தான் சொல்கிறேன். நான்தான் முடிநாகன். அந்தக் கதையை எழுதியவன்"

கதை எழுதும் மூஞ்சியைப் பார் மூஞ்சியை! யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்! இதோ பார், உனக்கு வயிற்றுப் பசியா, ஏதாவது கேள். நாங்கள் தரப்போகும் ஓரணா, அரையணாவை வாங்கிக்கொண்டு போ! இப்படி "டுப் அளக்காதே! அகப்பட்டுக் கொள்வே! அப்புறம் போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் போகவேண்டி வந்துவிடும்" என்றான் ஒருவன்.

"அட எதுக்கப்பா அந்த ஆளோடு வீண் கதை! போகச் சொல்லப்பா அந்த ஆளை இங்கிருந்து!" இன்னொருவன் சொன்னான் அப்படி.

முடிநாகனுக்கு ஏன் அவர்களிடம் வந்து பேச்சுக் கொடுத்தோம் என்று ஆகிவிட்டது மெல்லத் திரும்பினார் அவர் வெளியேறுவதற்கு.

"ஐயா, ஐயா, நில்லு நில்லு! இந்தப் புத்தகத்திலே முடிநாகனுடைய படமே இருக்கிறது. இதைப் பார்த்தால் உன் வண்டவாளம் நன்றாகப் புரிந்துபோகும்" என்று ஒருவன் திரும்பிய முடிநாகனைத் தடுத்து நிறுத்தினான்.

"அட, அதை எதற்கப்பா வேலை மெனக் கெட்டுப் பார்க்கப்போறே! நாம் எல்லாம் முட்டாள்களா என்ன?" என்று வேறொருவன் தடுத்துப் பேசிக்கொண்டிருந்தபோதே, புத்தகத்தை வைத்திருந்தவன் அதை விரித்துப் பார்த்தான். அவன் வியப்போடு சொன்னான்:

"கிட்டத்தட்ட இந்தப் படத்திலுள்ள முகம் இந்த ஆளின் முகத்தைப் போலவே இருக்கிறதே! ஒருவேளை இந்த ஆள்தான் முடிநாகனோ!"

ஒவ்வொருவராகப் படத்தை வாங்கிப் பார்த்தார்கள். முடிநாகனையும் உற்று உற்றுப் பார்த்தார்கள்.

"ஆள் இதே ஆள்தான்! அட! இந்த ஆள் எழுதிய கதையா இது, நம்பவே முடியவில்லையே! — என்ன கதையிது! அப்படியொன்றும் பெரிதாக இதில் கற்பனையோட்டமோ, கதையோட்டமோ இல்லையே! இந்த மாதிரிக் கதைகளை யார் வேண்டுமானாலும் எழுதலாமே!"

முதலில் வியந்து பேசியவனே எழுதியவனை எதிரில் பார்த்ததும் இறக்கிப்பேசத் தொடங்கிவிட்டான். கையில் பத்திரமாக வைத்திருந்த புத்தகத்தைத் தூக்கி அலட்சியமாக இன்னொருவனிடம் எறிந்தான்.

"சரி, சரி, இந்த ஆளுக்கு ஏதாவது கொடுத்தனுப்புங்கள்" என்று ஒருவன் சொல்ல மற்றவர்கள் தங்கள் சட்டைப் பையைத் துழாவினார்கள்.

முடிநாதன் அங்கு நிற்கவில்லை. வெளியேறி விறுவிறு என்று நடந்தார்.

"அட இந்தஆள் ஒன்றும் வாங்கிக் கொள்ளாமல்போகிறானே! உண்மையில் இது ஒரு பைத்தியந்தான் போலிருக்கு!"

மண்டபத்திலிருந்த கூட்டம் ஏளனம் பேசி நகையாடியது.

ஆளைப்பார்த்துக் கதையை எடை போடும் அந்த உணர்வுக் குருடர்களின் கெக்கொலி தமிழறிஞர் ஒருவரின் உள்ளக்கிடக்கையைத்தான் அங்கே வலியுறுத்தியது.

"நன்மையைக் கண்டு பாராட்டவோ, வரவேற்கவோ தெரியாது. தீமையை எதிர்க்கவும் திறனில்லை. ஆனால், இரண்டையும் பார்த்து நகைக்கமட்டும் இவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள்."

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.